பக்கங்கள்: 17 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 30 ஞாயிற்றுக்கிழமை 15.08.2021 கதிர் 283

### இனி இது ரகசியம் அல்ல!

'தமிழன் பத்திரிகையின் ஆசிரியர் ஆர்.சிவராஜாவின் வீடு தேடி விசாரணை நடத்த வேண்டும் என்று கூறிக்கொண்டு தம்மைப் புலனாய்வுப் பிரிவினர் என அடையாளப்படுத்திய இருவர் அதிகாலை 2.30 மணிக்குச் சென்ற விடயம் இப்போதுதான் பக்கம்02

## நாடெங்கும் தொடரும் அச்சம் நேற்று 3,245 தொற்றாளர்கள்

### மக்கள் அவதானம் என்கிறார் இராணுவத் தளபதி



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 3 ஆயிரத்து 245 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2

## ஒரே நாளில் 160 பேரை சாகடித்தது கொரோனா

### மொத்தக் காவு எண்ணிக்கை 5 ஆயிரத்து 935

இலங்கையில் நேற்றுமுன்தினம் 160 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இதுவே நாட்டில் இதுவரை ஒரே நாளில் பதிவான அதிகக்கூடிய கொரோனாச் சாவு எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக்கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தச் சாவுகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2

# இலங்கையில் கொரோனா மரணங்களுக்கு கோட்டாவும் சவேந்திரவுமே முழுப்பொறுப்பு

### நாட்டை முடக்காமல் இருக்கும் இருவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்கின்றார் சுமந்திரன்



இலங்கையில் இடம்பெறும் கொரோனா மரணங்களுக்கு ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுமே காரணம். அவர்களே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். சுகாதாரத் தரப்பினரின் கோரிக்கையைக் கேட்டு நாட்டை உடனடியாக முடக்காது உயிரிழப்புக்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதி மற்றும் இராணுவத் தளபதி ஆகிய இருவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

## கிளிநொச்சியில் நேற்று 43 பேருக்கு கொரோனா

கிளிநொச்சி, ஒகஸ்ட் 15

கிளிநொச்சி நகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 43 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

196 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் அண்மைய நாள்களாக பெருமளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் வீதியில் வீழ்ந்து உயிரிழந்தவர் உட்பட இருவர் கொரோனாத் தொற்றால் மரணம்

கிளிநொச்சியில் உயிரிழந்த இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உயிரிழந்த 75 வயதுடைய பெண் மற்றும் 47 வயதுடைய ஆண் ஆகிய இருவரின் மாதிரிகள் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவற்றின் முடிவுகள் நேற்றிரவு வெளியாகின.

அவற்றின் அடிப்படையில், நேற்றுமுன்தினம் வீதியில் வீழ்ந்து உயிரிழந்த கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஊழியரான விஜயகுமார் (வயது 47) கொரோனாத் தொற்றின் பாதிப்பினாலேயே உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் மிகத் தீவிரம் பெற்றுள்ள கொரோனா அபாயம் குறித்து மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 'லங்கா ஈ நியூஸ்' எழுத்தாளர் சி.ஐ.டியினரால் நேற்று கைது

'லங்கா ஈ நியூஸ்' இணையதளத்தின் எழுத்தாளர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது எனப் போலியான செய்தி வெளியிட்ட குற்றச்சாட்டில் குறித்த எழுத்தாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டியில் வசித்து வரும் கீர்த்தி ரத்நாயக்க என்பவரே இவ்வாறு கைது 2

## சிறைக் கைதிகளை பார்வையிடத் தடை!

நாட்டில் மிகத் தீவிரமடைந்துள்ள கொரோனா பரவல் காரணமாக மறு அறிவித்தல் வரை அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள கைதிகளைச் சந்திக்கப் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று 2

## கொக்குவிலைச் சேர்ந்தவர் கொரோனாவால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 15

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொக்குவிலைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 177 ஆக உயர்வடைந்துள்ளது.

## அச்சமற்ற எதிர்காலத்தை ஏற்படுத்துங்கள்!

### சீருடை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட யாழ்.இளைஞர்கள் வேண்டுகோள்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரி மற்றும் தண்டப்பணம் அறவிடுவதற்காக நியமிக்கப்பட்ட இளைஞர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையினால் அண்மையில் உருவாக்கப்பட்டு, சர்ச்சையை ஏற்படுத்திய வரி மற்றும் தண்டம் அறவிடுவதற்கான அணியுடன் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் 5 பேரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அண்மையில் 2

## யாழ்ப்பாணத்தில் நேற்று 86 பேருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 86 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 29 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 12 பேருக்கும், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 08 பேருக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 06 பேருக்கும், இளவாலை பிரதேச வைத்தியசாலையில் 05 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 04 பேருக்கும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேருக்கும், 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உரிய கவனிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது.

நேற்று பத்திரிகையாளர் சிவராஜாவுடன் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர் என்ன நடந்தது என விசாரித்திருக்கின்றார். விவரத்தைச் சொன்ன சிவராஜா தமது பொலிஸ் முறைப்பாட்டுக்கு அப்பால் எதுவும் நடக்கவில்லை என்பதையும் பிரதமருக்குக் கோடி காட்டியிருக்கின்றார்.

அவ்வளவுதான். உரிய தரப்புகள் மீது பிரதமரின் சீற்றம் பாய்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

ஐந்து நிமிடத்தில் பொலிஸ் மா அதிபர் சிவராஜாவுடன் தொடர்பு கொள்ளுவார், விடயங்கள் மளமளவென்று நடக்கும் என்று சிவராஜாவிடம் தெரிவித்திருக்கின்றார் பிரதமர்.

பிரதமர் கூறியபடி ஐந்து நிமிடத்தில் பொலிஸ் மா அதிபரிடமிருந்து 'தமிழன்' ஆசிரியருக்கு அழைப்பு விரைந்து வந்தது.

இந்த விடயத்தை விசாரிக்கும் பொறுப்பைக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைத்து உரிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளேன். அவர் இப்போது உங்களிடம் தொடர்பு கொள்வார் என்று சிவராஜாவிடம் கூறினார் பொலிஸ் மா அதிபர்.

அவர் கூறியபடி பத்து நிமிடத்தில் ஆசிரியர் சிவராஜாவுக்கு அழைப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரிடமிருந்து வந்தது.

உரிய விசாரணைகளுக்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. குற்றப் புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் நேரடியாகக் கையாள்வார், அவர் இப்போது உங்களுடன் தொடர்பு கொள்வார் என்றார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்.

அதையடுத்து சிவராஜாவிடம் தொடர்பில் வந்த குற்றப் புலனாய்வுப்பிரிவின் இயக்குநர், இந்த விடயத்தை புலன் விசாரணை செய்வதற்கென குற்றப்புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் தலைமையில் விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டு அது உடன் களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றது. பிரதேசப் பொலிஸாரிடமிருந்து விசாரணை நடத்தும் பொறுப்பு விலக்கப்பட்டு, இதற்கென அமைக்கப்பட்ட விசேட பொலிஸ் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அவர் தகவல் தெரிவித்திருக்கின்றார்.

இதனைத் தொடர்ந்து இவ்விடயத்தை விசாரிக்கும் விசேட பொலிஸ் பிரிவிற்குத் தலைமை வகிக்கின்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் குழு சிவராஜாவைச் சந்தித்து அவரின் வாக்குமூலத்தைப் பதிந்தமையோடு புலன் விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது என்ற தகவலையும் தெரிவித்திருக்கின்றது.

புலன் விசாரணை சரியாக நடந்தால், நள்ளிரவுக்குப் பின்னர் வீடு தேடி வந்த அந்த 'புலனாய்வாளர்களை' வளைத்து வியூகமிட்டு மடக்குவது அப்படி ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஆனால், வேலை 'உள்வீட்டு விவகாரம்' என்றால், விசேட பொலிஸ் விசாரணைக் குழுவின் முன் நகர்வும் ஒரு கட்டத்துடன் படுத்து விடும் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

பத்திரிகையாளர் சிவராஜா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்கு பரிச்சயமானவர். தொடர்ந்து பத்திரிகையாளராக அவரின் ஊடாட்டத்தில் இருக்கின்றவர்.

அவரது வீடு தேடியே 'புலனாய்வாளர்கள்' அந்த நடுநிசியில் செல்வார்கள் என்றால் நிலைமை திருப்திக்குரியதன்று என்பது தெளிவு.

பார்ப்போம், இப்போது விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன, பிரயோசனமாக ஏதும் நடக்கின்றதா என்று...!

இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கு எதிரான அரச கொடூரங்களுக்காக யாரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர் என்றோ, தண்டிக்கப்பட்டனர் என்றோ சரித்திரம் இல்லை.

சிவராஜா தொடர்பான சம்பவத்தின் புலன் விசாரணையும் அந்தச் சரித்தத்துக்குள் அடங்கினால் பத்திரிகையாளர்களாகிய நாம் என்ன செய்ய முடியும், பார்த்திருப்பதைத் தவிர...!

– மின்னல் –

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருவருக்கும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்கும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாடு பலவீனப்பட்டுள்ள நிலையில் நாட்டை உடனடியாக முடக்க வேண்டும் என்பதை சுகாதார, வைத்திய நிபுணர்களே வலியுறுத்தி வருகின்றனர். இந்த விடயத்தைச் சரியாகக் கையாளத் தெரிந்தவர்களும் அவர்கள் என்ற காரணத்தால் அவர்களின் கருத்துக்களுக்கு அனைவரும் செவிமடுக்க வேண்டும்.

நாட்டில் தற்போது கொரோனா மரணங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. நாளாந்தம் 150 இற்கும் அதிக மரணங்கள் பதிவாகிக்கொண்டுள்ளன. இந்தத் தரவுகள் குறித்து பல சர்ச்சைகளும் எழுந்துள்ளன. சுகாதார பணியகம் கூறும் தரவுகளை விடவும் அதிகமான கொரோனா மரணங்கள் பதிவாகியிருக்க வாய்ப்புகள் உள்ளன என்று பொதுச் சுகாதாரத்துறையினர் கூறி வருகின்றனர்.

எனவே, நிலைமை மோசமாக உள்ளதென்பது தற்போது சகலருக்கும் தெரிந்த ஒன்றே. இதன்போது சுகாதாரத் தரப்பின் கருத்துக்களுக்கு முழுமையாகச் செவிமடுத்து அவர்களின் யோசனைகளைப் பின்பற்ற வேண்டுமே தவிர இராணுவம் கூறுவதைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் எடுக்க முடியாது.

ஆனால், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் தீர்மானங்கள் கொரோனா செயலணியின் மூலமாக இராணுவத் தளபதியைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தாலே தற்போது நாடு பாரிய அச்சுறுத்தல் நிலையை அடைந்துள்ளது. அதேபோல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுகாதாரத் தரப்பின் கோரிக்கைக்கு செவிமடுக்காது தனது தனிப்பட்ட அரசியல் சுயநலன்களைக் கருத்தில் கொண்டு மக்களின் உயிருடன் விளையாடிக்கொண்டுள்ளார் – என்றார்.

## 'லங்கா ஈ நியூஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முன்னாள் விமானப்படை வீரரான கீர்த்தி ரத்நாயக்க 'லங்கா ஈ நியூஸ்' க்கு பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான கட்டுரைகளை எழுதி வந்துள்ளார்.

## சிறைக் கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய, வழக்கு நடவடிக்கை தொடர்பில் கைதிகளைச் சந்திக்க சட்டத்தரணிகளுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும், சுகாதார வழிமுறைகளின் கீழ் வழக்குத் தொடர்பான ஆவணங்கள் மாத்திரம் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் சிறைச்சாலை பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வல்லிபுர ஆழ்வார் மகோற்சவம் மாசி மாதத்துக்கு ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 15

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், ஆலய தர்மகர்த்தா சபை மகோற்ச வத்தை எதிர்வரும் மாசி மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தின் முடிவில் இவ்வருடம் மகோற்சவம் நடத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆலய தர்ம கர்த்தா சபையினர், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் திருவிழா உபயகாரர்களுடன் ஆலய வளாகத்தில் நேற்று கலந்துரையாடலை நடத்தினர்.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில், ஆலய மகோற்சவத்தை அடுத்த வருடம் மாசி மாதம் வரும் பூரணை மகம் நாளுக்கு ஒத்திவைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## அச்சமற்ற எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சந்தித்து உதவி கோரியிருந்தனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் இளைஞர்கள் அமைச்சரைச் சந்தித்தனர்.

யாழ். மாநகர மேயர் மணிவண்ணனினால் வரி மற்றும் தண்டம் அறவீடு போன்றவற்றுக்காக உருவாக்கப்பட்ட குறித்த அணியுடன் சம்பந்தப்பட்ட 5 இளைஞர்களும் தொடர்ச்சியாகப் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் எதிர்காலம் பற்றிய அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறான செயற்பாடுகளின்போது, கடந்த கால அனுபவங்களையும் தற்போதைய சூழலையும் நிதானமாக ஆராய்ந்து செயற்பட வேண்டும். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதால் பலன் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இதுதொடர்பாக கலந்துரையாடி பாதிக்கப்பட்டவர்களுக்கு கௌரவமான எதிர்காலம் உறுதிப்படுத்தப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

யாழ். மாநகர மேயர் மணிவண்ணனினால் வரி வசூலிப்பு மற்றும் வீதிகளில் குப்பை போடுவோருக்குத் தண்டம் அறவிடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட அணியினருக்கு வழங்கப்பட்ட சீருடை, தமிழீழ விடுதலைப்புலிகளின் காவல்துறையின் சீருடையை ஒத்தவகையில் இருப்பதாக தென்னிலங்கையில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, யாழ். மாநகர மேயர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

எனினும், குறித்த அணியின் உறுப்பினர்களாக உள்வாங்கப்பட்டிருந்த தங்களைப் பல்வேறு தரப்புக்களும் தொடர்ச்சியாக விசாரணைக்கு அழைப்பதாகவும், தாங்கள் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

தமக்கு கௌரவமான, அச்ச சூழல் அற்ற எதிர்காலத்தினை உறுதிப்படுத்தித் தருமாறும் இளைஞர்கள் அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 935 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 160 பேரில் 87 ஆண்களும், 73 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஓர் ஆண் 30 வயதுக்குட்பட்டவர். 22 ஆண்கள், 13 பெண்கள் என 35 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 124 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 64 ஆண்களும், 60 பெண்களும் அடங்குகின்றனர்.

## நாடெங்கும் தொடரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

3 இலட்சத்து 51 ஆயிரத்து 515 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

நாட்டின் தற்போதைய ஆபத்தான நிலைமையில் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 717 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 345 ஆக உயர்வடைந்துள்ளது.

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Engineering
Diplpma holders in HNDA, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

# கொரோனாத் தொற்றால் சப் இன்ஸ்பெக்டர் சாவு

நோய் நிலைமை காரணமாக உடுகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உயிரிழந் துள்ளார். இதன்போது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் கடந்த 12 ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. உடுகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# ஐந்து கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு கடத்த முற்பட்ட 2 கிலோ 250 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 120 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.



இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி 2 கோடி ரூபாவுக்கு மேற்பட்டது எனவும் கஞ்சா போதைப் பொருளின் பெறுமதி 2 கோடியே 40 லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

பொலிகண்டி கடற்கரை வீதியில் வைத்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்த கடத்தல் நடவடிக்கையை கடற்படை மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் ஆகியோர் இணைந்து முறியடித்தனர் என்று கடற்படை யினர் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்கள் 38, 34, 28 வயதுடைய மாங்குளம், இரணைமடு மற்றும் கிளிநொச் சியைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினரின் வழமையான ரோந்து நடவடிக்கையின் போது பொலிகண்டி கடற் கரை வீதியில் வைத்து வாகனம் ஒன்றில் ஏற்ற முற்பட்ட போது குறித்த போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை கடத்த முற்பட்ட னர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய் யப்பட்டமையுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப் பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் மூவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையுடன் வல்வெட்டித் துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
070 330 5500
075 330 5500
077 888 9388
லண்டன் 1000/= (1 kg க்கு மேல்)
பிரான்ஸ்,ஜேர்மனி,பெல்ஜியம், டென்மார்க்,நெதர்லாந்
11 Kg க்கு 13,000/=
மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1100/=
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் | சங்கத்தானை | மல்லாவி
சங்கானை | பளை | மன்னார்
கல்வியங்காடு | கிளிநொச்சி | வவுனியா
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | திருகோணமலை
நெல்லியடி | முல்லைத்தீவு | மட்டக்களப்பு
கைதடி | கனகராயன் குளம் | கொழும்பு

BRRENS Fashion Planet
Reborn Signature
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
பிறென்ஸ் பஷன் பிளானட்
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
075 527 9110
077 332 1937
021 2221 2777

INDIVIDUAL ENGLISH CLASSES
K. GANESH (BA. Pera)
இலகுவாக கதைக்கும் ஆங்கில வசன அமைப்பு முறை. Tenses, Active and Passive, Direct and Reported Speech
Grade 7 - GCE O/L - A/L
பட்டதாரிகள், தொழில் செய்வோர் அனைவரும்
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்த்துறை மன்றம்
CHAMPER OF COMMERCE AND INDUSTRIES OF JAFFNA

**இன் 16வது நிர்வாக அங்கத்தவரை தேர்ந்தெடுப்பது தொடர்பானவை**

CCIY மூலம் வடமாகாணத்தின் வர்த்தகத்துறையை மேம்படுத்தி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை பெருக்குவதற்கான நோக்கத்தில் எமது சண்சக்தி ட்ரேடர்ஸ் நிறுவனர்

**திரு.செ.கனகராஜா ரமணாகரன்**

இயக்குநர் பதவிக்கு போட்டியிடுகிறார்.

ஜேர்மன் நாட்டிலிருந்து இங்கு வந்துள்ள குழுவினர் இளைஞர்களுக்கு பயிற்சி கொடுக்க தயாராக உள்ளனர். ஜேர்மன் நாட்டுக்கு அழைத்தும் செல்லவுள்ளனர்.

திரு.ரமணாகரன் ஜேர்மன் நாட்டில் பல வருடங்கள் இருந்து ஜேர்மன் மொழியை சரளமாக பேசக்கூடியவர் என்பதால் இப்பொறுப்பில் திறம்பட செயலாற்றுவார். ஆனால் CCIY நிர்வாகிகள், உறுப்பினர்களிடம் பிரசாரம் செய்வதை தடுத்து வரு கிறார்.

ரமணாகரன் தேர்ந்து எடுக்கப்பட்டால் எம் இளைஞர்களின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்படும் தொழில் வளம் பெருகும்.

தங்கள் ஒத்துழைப்பை கோருகிறோம்.
CCIY உறுப்பினர்கள் உடனடியாக திரு.ரமணாகரன் அவர்களை தொடர்புகொள்ளவும்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி!
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!

Coming together Is Beginning - Staying Together Is Progress - Working Together Is SUCCESS

SST சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்
தகவல் தொழில்நுட்பம் & பாதுகாப்பு கருவிகள் வழங்குநர்
# 395, கண்டி (ஏ9) வீதி, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 7994 / 077 593 0335 / 077 552 7099
www.sunsakthy.com / info@sunsakthy.com
www.facebook.com / sst.sunsakthy

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யார் ஓதும் வேதம் இது?

'அழுவர் அலுவர் எல்லாம் தம் தம் கரைசல்; திருவன் பொண்டாட்டிக்கு அலுவர் இல்லை' – என்று ஒரு பழமொழி நம் மத்தியில் உண்டு.

ஒரு செத்த வீட்டில் மறைந்தவருக்காக எல்லோரும் அழுது கொண்டிருந்தனர் – அவர் மறைவால் ஏற்பட்ட இழப்புகளை எண்ணி. செத்த வீட்டுக்கு வந்த திருவனும் அழுதானாம் – தன் மனைவி செத்த போது அப்படி யாரும் வந்து அளவில்லை என்ற கவலையில்.

இந்தப் பழமொழி போன்று இருக்கின்றது நீதிக்காக சர்வதேசத்தை அணுகுவதற்கு தயார் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின்இப்போததைய அறிவிப்பு.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக நீதி வேண்டி சர்வதேசத்தை நாடப் போகிறாராம் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

இன, மத, மொழி, குல வேறுபாடுகளைக் கடந்து மனிதத்தை நேசியுங்கள் என்றுதான் புத்தர், நபி, ஏசு, வள்ளலார் வரை அனைத்து மதத் தலைவர்களும் போதித்தனர். அதையே அனைத்து மதங்களும் கூட போதிக்கின்றன என்று அந்தந்த மதங்களின் தலைவர்களும் கூறுகின்றனர்.

இப்போது பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் கேட்பீர்களாயின் இதே தத்துவத்தைத்தான் அவர் உபதேசித்து உறுதிப்படுத்துவார்.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் விடயத்தில் ஒரு கண்ணில் நெய் வார்த்தபடி, மறு கண்ணில் சுண்ணாம்பு ஊற்றியவாறு இத்தகைய தத்துவங்களை அவர் பேசுவது அர்த்தமற்றது; அபத்தமானது. இதனை, இந்த இலங்கைத் தீவில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில் சகல மரியாதைகளுடனும் பணிவுடனும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நீதிக்காக சர்வதேசத்திடம் அணுகுவோம் என்ற குரலை எழுப்புவதில் தமக்கு வெட்கம் இல்லையா என்பதை மதத்தின் பெயரினால் கர்தினாலுக்குரிய பரிசுத்த ஆடையை அணிந்திருக்கும் அவர் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் தமக்குள் சிந்தித்து சுயமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பிரதானமாக கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பெரும் கொடூரம். அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. அந்த கொடூரத்திற்கு நீதி கிடைக்காமல் தடுக்கப்படுவது கண்டிக்கப்பட வேண்டும். பேராயர் குறிப்பிடுகின்றமை போல அதற்காக ஒன்று திரண்டு குரல் எழுப்பி, எதிர்ப்புக் காட்டி, சர்வதேசத்திடம் நீதி கோருவது கூட கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்றுதான்.

ஆனால் அத்தகைய அழைப்புக்குரிய அடிப்படைத் தகுதி கூட அவருக்கு உண்டா என்ற ஒரு கேள்வியை இந்த இலங்கைத் தீவின் வரலாற்று பெரும் கொடூரத்தைச் சந்தித்த ஓர் இனத்தின் சார்பில் அவரின் மனச்சாட்சியின் முன் வைக்க விரும்புகிறோம்.

இந்தக் கேள்விக்கான நியாயமான தீர்ப்பை, பாதிக்கப்பட்ட இனத்திடம் நேரடியாகப் பெறாமல், அவர்களின் சார்பில் அதே பேராயரின் திருச்சபையைப் பிரதிநிதித்துவம் செய்யும் உயரிய ஆயர்களின் அமைப்பான – 'வடக்கு – கிழக்கு ஆயர் மன்றத்திடம்' அவர் ஒரு தடவை கேட்டுப் பார்த்து விட்டுப் பேசுவது பொருத்தமானது.

இந்த இலங்கைத் தீவில் தமிழர்கள் – அப்பாவிப் பொது மக்கள் – பேரினவாதத்தின் இரும்புக் கரங்களால் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட போது, மனிதநேயத்துடன் அதனை அணுகி, அந்தக் கொடூரங்களைக் கண்டித்து, நீதி செய்ய முயலாத – லாயக்கற்ற மேய்ப்பர்தான் அவர். சிங்களப் பேரினவாதத்தின் அட்டூழியங்களைப் பார்த்தும் பார்க்காமலும் இருக்கும் நடிப்பை முன்னெடுத்தமை மூலம் அதற்கு ஒத்துழைத்து, உதவியவர். இன்றும் கூட தமக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு சர்வதேசத்தை நாடி தமிழர்கள் அலையும் போதும் அதற்காக குரல் எழுப்ப மறுத்து, அமானுஷ்ய அமைதி பேணுவது போல நடித்து, அந்தக் கொடூரங்களுக்கு அங்கீகாரம் வழங்கி நிற்பவர் அவர்.

இப்போது அவர் சர்வதேச நீதி வேண்டி குரல் எழுப்புவது – அதுவும் இலங்கைப் பேரழிவுகளில் பெரும் அழிவுகளைத் தாம் ஏற்று அங்கீகரித்து நின்றபடி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு மட்டும் நீதி வேண்டித் தத்துவம் பேசுவது வேறு ஏதோ ஒன்று வேதம் ஓதுவது போன்ற தோற்றத்தையே தந்து நிற்கின்றது.

அவர் படித்தது – படித்துக் கொண்டிருப்பது – சமாதான பிரபு, உலக இரட்சகன், தேவதூதன் வழிகாட்டிய உண்மையான பைபிள் ஆக இருக்குமானால் இலங்கைத் தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவரது குரல் ஒப்புரவானதாக இருக்கும். பக்கச் சார்பானதாக இருக்க முடியாது. இந்த நாட்டின் சிறுபான்மையினரான ஈழத்தமிழர்களைக் கொன்று ஒழித்துக்கொண்டிருக்கும் சிங்கள பேரினவாதத்திற்குத் துணை போய், குற்றமிழைத்தபடி இன்னொரு சிறுபான்மை மத மக்களுக்கான பிறிதொரு இழப்புக்கு நியாயம் கேட்பது நீதி முறையானது அல்ல; நீதிக்கும் கடவுளுக்கும் கூட இது ஏற்புடையது அல்ல. அதற்கான தகுதியும் அவருக்கு இல்லை.

## உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் நிலைமை கட்டுப்பாட்டை மீறும் ஆபத்து!

### உபுல் றோஹண எச்சரிக்கை



இலங்கையில் கொவிட் - 19 நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், கொவிட் உயிரிழப்புகளின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருவதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு அரசாங்கத்தையோ அல்லது மக்களையோ குற்றம் சொல்ல முடியாது என்றும் தற்போதைய நிலைமைக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், இல்லையெனில் நிலைமை கட்டுப்பாட்டை மீறலாம் என்றும் அவர் கூறுகிறார்.

தற்போது நாளாந்தம் பதிவாகும் கொவிட் - 19 நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அடிமட்டத்தில், கொவிட் - 19 வேகமாக பரவுவதை நாம் காணலாம், எனவே, தற்போதைய நிலைமை இன்னும் சில நாள்களுக்கு தொடர்ந்தால், வைத்தியசாலை அமைப்பு மற்றும் சுகாதார அமைப்பின் திறன் விரைவில் மீறப்படும்.

தற்போதுள்ள தீவிர சிகிச்சை பிரிவு வசதிகள், வைத்தியசாலை படுக்கைகள் மற்றும் ஒக்ஸிஜன் திறன் தீர்ந்துவிட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

'ஒட்சிசனுக்கான தேவை கடுமையாக உயர்ந்துள்ளது. வைத்தியசாலைகளுக்கு ஒட்சிஜன் வழங்குவதில் சில இடையூறுகள் இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

தற்போது, கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட வைத்தியசாலைகளில் உள்ள கொவிட் நோயாளிகளின் திறன் அதிகமாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையை கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் மாற்ற முடியும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்தியாவசிய கடமை இல்லையென்றால், ஒருவர் தனது மற்றும் தனது அன்புக்குரியவர்களின் பாதுகாப்பைப் பற்றி சிந்தித்து, சுகாதார வழிகாட்டுதல்களின்படி பாதுகாப்பாக செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

## நாட்டை முழுமையாக முடக்காவிடின் கொவிட் படுகொலையே அரங்கேறும்!

### எச்சரிக்கை விடுக்கும் மருத்துவத்துறை நிபுணர்



இலங்கையை உடன் முடக்கிக் கொவிட் மரணங்களைத் தடுக்கத் தவறும் பட்சத்தில் நாட்டில் கொவிட் படுகொலையே இடம்பெறும் என்று சமூக மருத்துவத்துறை நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயத்தில் இப்போது தீர்மானம் எடுக்காது பொறுப்பைத் தட்டிக்கழிப்பதும், அதன் மூலமாக மக்களைக் காப்பாற்றாது போவதும் ஒரு விதத்தில் படுகொலைக்குச் சமமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இந்தியாவை விட 10 மடங்கு அதிகமாக இலங்கையில் மரணங்கள் பதிவாகலாம் என்ற அச்சுறுத்தல் உள்ளது. இது எண்ணிக்கையில் அல்ல, வீதத்தில் கணிக்கப்பட வேண்டும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி இந்தியாவை விட நான்கு மடங்கு வீதத்தால் கொரோனா மரணங்கள் அதிகரித்துள்ளன. அடுத்த மூன்று நான்கு வாரங்களில் இது மேலும் அதிகரிக்கும்.

எனவே, உடனடியாக நாட்டை முடக்கும் தீர்மானம் எடுத்து மரண எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போதுள்ள நிலையில் தரவுகளுக்கு அமைய, நாளாந்தம் 600 மரணங்கள் பதிவாகலாம்.

ஆனால், மாற்றங்களை முன்னெடுத்தால் மரணங்களைக் குறைக்க முடியும். எவ்வாறாயினும் நாளாந்தம் 150 மரணங்கள் பதிவாவதைத் தடுக்க முடியாது.

இதனைவிட அதிகரிக்க இடமளிக்கக்கூடாது என்பதையே நாம் கூறுகின்றோம். இதனால் நாட்டை முடக்கினாலும் அடுத்த இரண்டு வாரங்களின் பின்னரே நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியுமாக இருக்கும். - என்றார்.

## பாதணிகளைக் கழற்றி கைகளில் ஏந்தி நல்லூரான் வீதியில் கடமையில் பொலிஸ்!



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த திருவிழா நேற்று ஆரம்பமானது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அசாதாரண சூழ்நிலையின் காரணமாக சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் இந்த வருட திருவிழா இடம்பெறுகின்றது.

நேற்று கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது.

இதன்போது, பெருமளவான பக்தர்கள் ஆலயத்தின் வெளியில் இருந்து நல்லூரானைத் தரிசித்துச் சென்றனர்.

இந்த நிலையில், அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸார் தங்களது காலணிகளை கழற்றி தமது கைகளில் எடுத்துக் கொண்டு ஆலய வளாகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

மேலும், இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியான நிலையில் பலரும் தமது பாராட்டுக்களையும், நல்லூரானின் ஆசி கிட்டட்டும் என்று தமது வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 45

ந.வித்தியாதரன்

1996 செப்டெம்பர் 7 ஆம் திகதி சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தியை செம்மணியில் 'யாழ் வரவேற்கிறது' வளைவில் வைத்து வழிமறித்த இராணுவத்தினர் பின்னர் அவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திப் படுகொலை செய்தனர் என்பதும், அவரைத் தேடிப் போன அவரது தாயார், தம்பியார், அயலவர் ஆகியோரையும் கொன்று அதே செம்மணியில் புதைத்தனர் என்பதும், எல்லோருக்கும் தெரிந்த உண்மைகள்தான்.

ஆனால் அந்த மர்மம் எப்படிக் கட்டவிழ்ந்தது என்பது பலருக்கும் தெரியாத உண்மை. அதைக் கூறுவதற்கு முன்னர் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும்.

கிருஷாந்தி விவகாரத்தினால் யாழ்ப்பாணம் தகிக்கத் தொடங்கியது. பாடசாலை பகிஷ்கரிப்பு, கடைகள்,வர்த்தக நிலையங்கள், வங்கிகள் இழுத்து மூடல், ஹர்த்தால் என்று சிவில் நிர்வாகம் குலையத் தொடங்கியது. பி.பி.ஸி. தமிழ் சேவை மூலமும் பிற வழிகளிலும் விடயம் பரவத் தொடங்கியது.

யாழ்ப்பாணம் உதயன் அலுவலகம் மிக மும்மரமாக செயற்பட்டது. உதவி ஆசிரியர் குமாரதாசன், செய்தியாளர் குகநாதன் என்று எல்லோரும் வெளியூர்கள், வெளித்தேசங்கள், கொழும்பு போன்ற இடங்களிலிருந்து வரும் செய்தியாளர்களின் அழைப்புகளுக்கு நிலைமைகள் பற்றி விறுவிறுவென்று விவரத்தை விரைந்து விளக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர். கிருஷாந்தி விவகாரத்தில் உலகெங்கும் அச்செய்திகளை முரசறையும் செய்தி ஏஜென்சி மையமாக - நம்பிக்கையானதும், உண்மையானதும், ஆதாரபூர்வமானதுமான தகவல்களை வழங்கும் முகவர் அமைப்பாக - உதயன் சளைக்காது செயல்பட்டுக் கொண்டிருந்தது.

அதனால் விவகாரம் கொழும்பிலும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. பெண்மணியான நாட்டின் தலைவி சந்திரிகாவுக்கு இதனால் பெரும் இக்கட்டு ஏற்பட்டது. அவரின் விசேட பணிப்புரையோடு வந்தார் யாழ் நகரத்தில் இருந்த 512 ஆவது பிரிகேட் படையணியின் தளபதி பிரிகேடியர் காமினி ஜெயசுந்தர. யாழ் நகர தளபதியான அவர் பார்த்தால் ஒரு



ஹிந்திப் பட கதாநாயகன் தோற்றம் உள்ளவர். என்னை அழைத்து நீண்ட நேரம் உரையாடினார்.

*“கிருஷாந்திக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஒரு துப்பும் கிடைக்கவில்லை. ஆனால் யாழ்குடாநாடு குழம்பி போய்க் கிடக்கிறது. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிறது. எங்கள் புலனாய்வாளர்களினால் எதையும் கண்டுபிடிக்கவே முடியவில்லை. தயவுசெய்து ஒரு துப்புத் தாருங்கள். அதை வைத்தே முழுவதையும் தடவிப் பிடித்து விடுவேன். எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். நாங்கள் உண்மையாக நடக்கக் காத்திருக்கிறோம். போராட்டத்துக்கு மக்களைத் தூண்டும் அதே கவனத்தை ஒரு துப்பையாவது எங்களுக்குப் பெற்றுத் தருவதில் செலுத்துங்கள். எங்களுக்கு உதவுங்கள். ஓரிழை கிடைத்தால் போதும். நான் உண்மையைக் கொண்டு வந்து அம்பலப்படுத்தி விடுவேன். எனக்கு அதற்கு முழு அதிகாரமும் உள்ளது. ப்ளீஸ் ஹெல்ப் பண்ணுங்கள்”* - என்று ஞானம்ஸ் ஹோட்டலில் அவரது தலைமையகத்தில் இருந்து நான் புறப்பட்டபோது எனது கைகளை பற்றியவாறு அவர் கோரியமை எனக்கு நினைவில் இருக்கின்றது.

அச்சமயத்தில் இதுபோன்ற சிவில் விவகாரங்களில் எங்களுடன் - ஊடகவியலாளர்களுடன் - விசேடமாக என்னுடன் - வெளியில் சத்தம் சந்தடி காட்டாமல் ஒன்றித்துப் பயணிக்கும் ஒரு ஜீவன் இருந்தது. உண்மையாக, நேர்மையாக நடக்கும் சமூகப் பொறுப்புள்ள மனிதர். யாழ்ப்பாணம் பிரதம தபால் அதிபர் கோடீஸ்வரன்தான் அவர். அலுவலக நேரத்தில் தொலைபேசியில் பேசுவார். அல்லாவிட்டால் கிழமைக்கு இரண்டுதடவையாவது என்னிடம் வந்து ஓரிரு மணித்தியாலங்கள் அரட்டையடித்து, சமா வைத்துச் செல்லாவிட்டால் அவருக்கு விடியாது. சுருட்டுப் பிடித்தவாறு அவர் பேசும் லாவகமே அலாதியானது. அந்த நட்புப் பற்றி எழுதுவதானால் அது நீண்டு விடும். அதனால் நிறுத்திக் கொள்கிறேன்.

கிருஷாந்தி குமாரசாமி ஒரு வகையில் கோடீஸ்வரனின் உறவினர். அயலவர். கிருஷாந்தி விடயத்தில் ஆரம்பத்திலிருந்து துணிச்சலுடன் செயற்பட்ட ஒரு ஜீவன் அவர் மட்டுமே. அவரால்தான் கடைசியில் இந்த மர்மத்தின் முடிச்சு அவிழ்ந்தது. அவரது மகன் இப்போது கிளிநொச்சியை மையமாக வைத்து செயற்பட்டு வரும் ருஷாங்கன். அவரும் ஓர் ஊடகவியலாளரே. கிருஷாந்தி விடயத்தில் தந்தையார் எப்படிச் செயற்பட்டார் என்பதை ருஷாங்கனின் வார்த்தைகளில் கீழே தருகிறேன் அதில் இருப்பவை வரிக்குவரி சரியானவை, துல்லியமானவை என்பதை அக்கால நடப்புகளின் சக பார்வையாளன், அவற்றுடன் பயணித்த ஒருவன் என்ற முறையில் உறுதியுடன் கீழே சமர்ப்பிக்கிறேன். அதைப் பாருங்கள்:-

*கிருஷாந்தி விவகாரத்தில் பரவலாகப் பேசவும், எழுதவும்பட்டுவரும் விடயங்களில் வெளிப்படுத்தப்படாத சில உண்மைகளும் மறைந்து கிடக்கின்றன. கிருஷாந்தி கொலை மர்மத்தை வெளிப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பாகவும், அதுவே பின்னர் செம்மணியில் நூற்றுக்கணக்கானவர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற உண்மை வெளிப்படக் காரணமாக அமைந்து செம்மணி படுகொலைகளை உலகறியச் செய்தது பற்றியும் பலரும் அறியாத சில விடயங்கள் இருக்கின்றன.*

*கிருஷாந்தி குமாரசுவாமியும், அவரது தாயார், சகோதரர் மற்றும் அயலவரும் காணாமல்போனமை முதல் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அவர்களது உறவினரான எனது தகப்பனார், அன்றைய யாழ்ப்பாண பிரதம தபாலதிபர் சுப்பிரமணியம் கோடீஸ்வரன் மேற்கொண்ட நடவடிக்கைகளும், அதுவே செம்மணி புதைகுழியை உலகறியச் செய்தது என்பதும் பலரும் அறியாத விடயம். கிருஷாந்தி குமாரசுவாமி காணாமல்போன பின்னர் ஒருநாள், அவரது ஊரான கைதடியிலிருந்து யாழ் இந்துக் கல்லூரிக்கு சைக்கிளில் கல்வி கற்பதற்காக பயணம் செய்து கொண்டிருந்த எனது தகப்பனாரின் சகோதரியின் மகன், வழியில் அரியாலைப் பகுதியில் இருந்த சைக்கிள் கடையொன்றில் கிருஷாந்தியின் சகோதரரான பிரவணனின் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனைக்காகத் தொங்க விடப்பட்டிருந்ததை அடையாளம் கண்டு விட்டார்.*

*பிரணவனின் சைக்கிளில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கர் ஒன்றை வைத்து அதனை அடையாளம் கண்ட அவர், உடனடியாக எனது தந்தையிடம் அந்தத் தகவலை அறியத்தந்தார். இந்த விடயத்தை யாழ்ப்பாண இராணுவத்தின் 512 ஆவது பிரிவுக்கு எனது தந்தையார் உடன் அறிவித்தார். விசாரணைகளை முன்னெடுத்த 512 ஆம் படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவப் பொலிஸார், எனது தந்தையாரான சு. கோடீஸ்வரனையும் அழைத்துக்கொண்டு யாழ் இந்துக் கல்லூரிக்குச் சென்று சைக்கிளை அடையாளம் கண்ட அவரது சகோதரியின் மகனையும் அழைத்து வந்து விசாரித்து விவரங்களைப் பெற்றுக் கொண்டனர்.*

*இதனடிப்படையில் அந்தச் சைக்கிள் கடைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட இராணுவப் பொலிஸார், பிரணவனின் சைக்கிள் உதிரிப்பாகங்கள் செம்மணி முகாமுக்குச் சென்றுவரும் இன்னுமொருவர் ஊடாக அந்தச் சைக்கிள் கடைக்கு விற்பனைக்காகக் கொடுக்கப்பட்டதைக் கண்டறிந்தனர். தொடர்ச்சியான விசாரணைகள் மூலம், செம்மணி முகாமிலிருந்து பிரணவனின் சைக்கிளை விற்ற இராணுவச் சிப்பாயைக் கண்டுபிடித்த இராணுவப் பொலிஸார், கிருஷாந்தி குமாரசுவாமி செம்மணி காவலரணில் இருந்த படையினரால் கூட்டுப் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டு, பின்னர் அவரைத் தேடிவந்த தாய், சகோதரர், அயலவர் உள்ளிட்ட அனைவரும் கொன்று புதைக்கப்பட்ட உண்மையைக் கண்டறிந்தனர். கைதுசெய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் தடுத்து வைக்கப்பட்டு கொழும்பில் நீதிமன்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. வழக்கு விசாரணைகளுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து அப்போது ஒரே போக்குவரத்து மார்க்கமாக இருந்த இராணுவத்தினரின் விமானம் மூலமே அடிக்கடி கொழும்புக்குச் சென்று சாட்சி கூறி கிருஷாந்தி கொலைவழக்குத் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு எனது தந்தையாரான சு. கோடீஸ்வரன் முக்கிய பங்கு வகித்தார். தனது சகோதரியின் மகனின் தகவலை அடிப்படையாக வைத்து உடனடியாக இராணுவத்தினரிடம் முறைப்பாடு செய்து, விசாரணைகளை முடுக்கிவிட்ட அவர், தொடர்ந்து வழக்கு விசாரணைகளிலும் பங்கெடுத்து வழக்கை முன்னெடுத்ததன் மூலம், செம்மணி பகுதியில் மேலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கொன்று புதைக்கப்பட்டார்கள் என்ற உண்மையும் வெளிப்படக் காரணமாக அமைந்தார். அன்றைய நெருக்கடியான, உயிராபத்தான சூழலில் அவர் இந்த முயற்சியை எடுத்திருக்காவிட்டால், கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை செய்யப்பட்ட விடயமும், இன்னும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அதே செம்மணி வெளியில் கொன்று புதைக்கப்பட்ட உண்மையும் இன்றுவரை வெளியுலகம் அறியாத ஒன்றாகவே இருந்திருக்கும்.*

- இவ்வளவும் ருஷாங்கன் எழுதிய முற்றிலும் உண்மையான தகவல்கள்.

இந்த விடயங்கள் இடம்பெற்ற 1997 ஆம் ஆண்டில் நான் தினபதியை விட்டு விலகி 14 ஆண்டுகள் கடந்திருந்தன.

ஆனால் எனக்குத் தெரியாமல் - என்னுடன் நீண்ட காலம் தொடர்பில்லாத போதும் - பி.பி.ஸி. தமிழ்ச் சேவையில் என் குரல் ஊடாக என்னைத் தொடர்ந்து கொண்டிருந்தார் என் ஆசான் சிவநாயகம் ஐயா.

ஒரு நாள் செம்மணி மனிதப் புதைகுழி பற்றிய என் தமிழோசைச் செய்தி முடிந்து சுமார் இருபது நிமிடத்தில் என் உதயன் மேசைக்கு கொழும்பில் இருந்து ஓர் அழைப்பு வந்தது.

எதிர்முனையில் 'ஹலோ' என்றதுமே அது அவரது குரல் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி பட்டம் பெற்றதைப் போல ஓரனுபவம் எனக்குக் கிட்டியது. அதை நாளை பார்ப்போம்.

(வளரும்....)



யாழ் பிரதம தபாலதிபராக இருந்த அமரர் சு.கோடீஸ்வரன்



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 99

**291. அவற்றுக்கு மேலும் பரிந்துரைகள் இருந்தனவா?**

உடனடியாக நடத்தப்பட வேண்டியவை என்பதற்கு மேல், அவற்றைச் செயற்படுத்தி வரக்கூடிய நம்பிக்கைகளால், மக்களிடையே சர்வமதத் தலைவர்களாலும், பொது சேவை நிறுவனங்களாலும் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வழிகளை கையாளவேண்டும்.

புலம்பெயர் சமூகங்கள் தங்களுக்குள்ளேயே இணக்கங்கள் கண்டு ஏற்படக் கூடிய அரசியல் வெற்றிடங்களுக்கு பொறுப்பேற்று, அரசாங்கத்துடன் இணைந்து ஒரு நம்பிக்கையான அரசியல் வேலைத்திட்டத்துக்கான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

தொலைநோக்கில், ஆனால் காலம் தாழ்த்தாது, உடனடியாக அரசமைப்புச் சட்டத்தின் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்தி அதிலுள்ள – சமநேரத்தில் இரு பகுதியினரும் செய்யக் கூடிய அதிகாரங்களை – நீக்கி சமர்ப்பித்த முன்மொழிதல்களின் அடிப்படையில் அரசியல் தீர்வை முன்னெடுக்க வேண்டும்.

இப்படியான ஓர் அணுகுமுறை இல்லாது நாங்கள் இந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது முடியாது. இப்படியே தொடர்ந்தால் மேலும் ஒரு வலுவான ஸ்ரீலங்காவுக்கு எதிரான மூர்க்கமான புலம்பெயர் சமுதாயமே உருவாக்கப்படும். எல்லாப் பிரதமர்களும், ஜனாதிபதிகளும் அரசாங்கங்களும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகள் தருவதாக வாக்குறுதிகள் தந்தனர். ஆனால் இன்று போல் தமிழ் மக்கள் என்றும் வன்முறைகளையும், வானத்திலிருந்து பொழியும் குண்டுகளையுமே பெற்றிருக்கிறார்கள். இந்த அரசாங்கங்கள் முன்னவர்கள் மாதிரி இல்லாமல் தமிழ் மக்களை ஒரு நம்பிக்கை தரக்கூடிய பாதையில் நடத்தி சென்றால்தான் ஒரு சுமுகமான புலம்பெயர் சமூகத்துடன் சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்பலாம்.

**292. இந்த பரிந்துரைகளை ராஜபக்ஷக்கள் மூலம் அமுல்படுத்தலாம் என நினைத்தீர்களா?**

எல்லா முயற்சிகளும் ஒரு நம்பிக்கையின் அடிப்படையில்தான் முன்னெடுக்கப்படுகின்றன. போரின் அந்திம காலகட்டத்தில் போய்ச் சேருவோம் என்பது நாம் எதிர்பார்த்ததல்ல, திட்டமிடப்பட்டதும் அல்ல. எங்கள் குழுவில் இருந்தவர்கள் எல்லோரும் பல புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்தவர்கள். அப்போது நாம் சிறிலங்கா குடியுரிமை கெண்டவர்களும் அல்லர். ஸ்ரீலங்காவில் இருந்து புலம் பெயர்ந்தமை அவர்கள் மீது திணிக்கப்பட்டதொன்று.

இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துப் பங்குபற்றுவதால் ஓர் அரசியல் திருப்புமுனையை சாதித்து விடலாம் என்ற மாயையில் நாங்கள் அங்கு செல்லவில்லை. ஏதோ ஓரளவு முன்னேற்றத்தைக் காணலாம், மேலும், இது கொழும்பில் நடப்பதால் சம்பவங்களில் நேரடியாக ஈடுபட்டுள்ள சில தரப்புகளைச்



சந்தித்து நிலைமைகளை அவர்களிடமிருந்து அறிவதுடன் அரசாங்கத்தின் நிலைப்பாடு, அதன் சிந்தனை போக்கு போரின் பின் எப்படியாக அமையும் என்பவற்றையும் பங்குபற்றுவோர் ஊடாக அறிய முடியும் எண்ணம்.

நாங்கள் சிலவற்றை அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, தமிழ்மக்களுக்கும் தெளிவாக கூறியிருக்கிறோம்.

நாங்கள் அரசியல் வாதிகளல்லர். ஏதாவது அரசியல் கட்சியின் அனுசரணைக்காக இங்கு யாருடைய அரசியல் அபிலாஷைகளை முறிக்கவோ, வளர்க்கவோ வரவில்லை.

ஸ்ரீலங்காவின் நடப்புகளை ஒட்டி எங்களுக்கிருந்த விசனங்களால், அதன் அழிவுகளால், இந்த மோதல்கள் சமூகத்தில் பரவிவிட்ட பிழைகளால் நாட்டின் சமூகங்கள்



செயலிழந்து விட்டன எனக் கருதி செயயக்கூடிய கருத்தாக்கங்களை செய்யவே இதனை முன்னெடுக்கிறோம்.

நாங்கள் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் பிரதிநிதிகளல்லர். இதை ஒரு ஈடுபாடாகவே கருதுகிறோம். குண்டுகளுக்கு மத்தியில் வாழும் மக்களின் ஆணைகள் எதுவும் எங்கள் கைகளில் இல்லை. அக்கறை கொண்ட மனிதர்களாகவே இந்த அரசாங்கத்தின் நோக்கங்கள், திட்டங்கள் என்பன பற்றி அறியலாம் எனவும், அவை நேர்மையானவையாக, நம்பிக்கை தருபவையாக இருந்தால் இந்த ஈடுபாட்டை மேம்படுத்தி, உடைந்து கிடக்கும் இனங்களின் ஒற்றுமைக்காக ஆக்கபூர்வமான வழிகளில் செயற்றிட்டங்களை மேலெடுக்க விரும்புவோம்.

இவற்றை விட மேலும் சிலவற்றைத் தெளிவாக தெரிவித்தோம். அது புலம்பெயர் சமூகத்திடமும், எல்லா இனத்தவர்களிடமும், நாங்கள் சில தவறுகளை செய்கிறோம் என்று சொன்னாலும் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் முடிகிறது. கருத்து வேற்றுமைகள், மோதல்கள் என்பன திருமண பந்தங்களிலிருந்து, இராஜதந்திர உறவுகள் வரை இருந்தே வந்திருக்கின்றன. சிறிலங்காவும் அதற்கு விதிவிலக்கல்ல. இதற்குத் தேவையான பரிகாரம் புரிந்துணர்வுள்ள அணுகுமுறையே அன்றி மோதல்களும் எதிர்ச் சமர்களும் அல்ல. எதிர்ச் சமர்களும் கிளர்ச்சிகளும் இரண்டு வழிகளில் ஒன்றிலேதான் முடிகின்றன. ஒன்று – கிளர்ச்சியாளர்களின் கோரிக்கைகள் முறியடிக்கப்படுவது. அல்லது இரண்டு பேரும் ஏற்றுக்கொண்ட ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்துவது. இப்படியான ஓர் உடன்ப டிக்கையை ஏற்படுத்தலாம் என்ற எண்ணத் தில்தான் இதனை முன்னெடுத்தோம்.

**293. எப்படியாக?**

தமிழ் புலம்பெயர் சமூகத்தின் பலவித கருத்துக்களையும், விடுதலைப் புலிகள் உட்பட, ஒன்று சேர்த்து ஓர் பொது நிலைப்பாட்டை உள்வாங்கி, அதன் அடிப்படையில் அரசாங்கத்தை ஒரு பொதுக்குழு சந்தித்து, போரில்லாத சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த முயற்சிப்பதே குறிக்கோளாக இருந்தது.

யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகள்

தமிழ் மறைமாவட்டங்கள் நான்கையும் ஒன்றிணைத்து ஆழமாகப் பணியாற்ற வட கிழக்கு ஆயர் மன்றம் உதவும் (06.06.2021) என்ற யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளின் ஆக்கத்திற்கு வந்த கருத்துக்கள் இவை:-

**தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப்பணியகம்**
**நெதர்லாந்து**

புலம்பெயர்ந்து நெதர்லாந்தில் வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்கள் மத்தியில் கத்தோலிக்க ஆன்மீகப் பணியாற்றும் நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இரண்டாவது பதிவு இதுவாகும். முன்னர் தெரிவித்த அதே கருத்தை இன்னும் அழுத்தமாகத் தெரிவிக்கிறது. மிகவும் நல்ல விடயம். பாராட்டுதலுக்கும் உரியது. ஏன் நாலு மறை மாவட்டத்துடன் நின்று விடாது மேலும் புதிய மறைமாவட்டங்களை முயற்சிக்க கூடாது? மட்டக்களப்பு, திருமலை தனி மறைமாவட்டங்களாக முடியும் என்றால் ஏன் கிளிநொச்சி முல்லைத்தீவு அடங்கிய கிளி.முல்லை மறைமாவட்டம் ஒன்று உதயமாக உழைக்க கூடாது? இதுவும் ஒரு முக்கிய தேவைதானே?

**மைக்கல் பெர்ணான்டோபுள்ளே**
**இத்தாலி**

கொழும்பைச் சேர்ந்த இவர் தற்போது உரோம் இத்தாலியில் வசிக்கிறார். காலத்துக்கு தேவையானது. கொஞ்சம் பிந்தி என்றாலும் இப்படி ஒன்று மிகவும் நல்லது. கொழும்பில் தமிழ் புறக்கணிப்பு அதிகமாகவே உள்ளது. - என்கிறார்.

**பேதுறுப்பிள்ளை ஜெயந்தன்**
**பரிஸ், பிரான்ஸ்**

பேதுறுப்பிள்ளை ஜெயந்தன் என்பவர் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்றவர். தற்போது பரிஸ், பிரான்ஸில் வசிப்பவர். இம்முயற்சி மிகவும் நன்று என்கிறார்.

**எஸ்.ஜே. யூலியன்**
**கோலாலம்பூர், மலேசியா**

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தற்போது கோலாலம்பூர் மலேசியாவில் வசிக்கிறார். எஸ்.ஜே. யூலியன் என்பவரது கருத்து பின்வருமாறு அமைந்துள்ளது. மிகவும் சிறந்த ஒரு தொடக்கம். தொடர்ந்து தூய ஆவியாரின் வழிநடத்துதலால் வெற்றி பெற இறைவன் அருள் கூர்வாராக.

**ஈழவன் அசிசி**
**யாழ்ப்பாணம்**

ஈழவன் அசிசி என்பவர் வாழ்த்துக்கள் எனத் தெரிவிக்கிறார்.

**இரட்ணம் தயாபரன்**
**கரவெட்டி, யாழ்ப்பாணம்**

கரவெட்டியில் வசிக்கும் பிரபல செய்தியாளர் இரட்ணம் தயாபரன் அவர்கள் மிகத் திறம் எனத் தெரிவிக்கிறார்.

**கிளாறம்மா ஜெரோம்**
**பிரான்ஸ்**

கிளாறம்மா ஜெரோம் என்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தற்போது பிரான்ஸில் வசிக்கிறார். வட கிழக்கு ஆயர் மன்றத்திற்கு வாழ்த்துக்கள் என்கிறார்.

**திரேஸ் மரியதாஸ்**
**சறே, லண்டன்**

சறே என்னும் இடத்தில் வசிக்கிறார் திரேஸ் மரியதாஸ் என்பவர். இவரின் இரண்டாவது பதிவு இதுவாகும். இதில் அவர் இவ்வாறு தெரிவிக்கிறார்:- வாழ்த்துகள் குருவே. இதில் ஒன்று மாற்றினால் நல்லதென நான் நினைக்கிறேன் செபப் புத்தகங்கள் மற்றும் மானவைகளை இலங்கையிலேயே அச்சிட்டு வெளியிடுவதில் என்ன சிக்கல்களை திருச்சபை எதிர் நோக்குகிறது?

**ஜெஸ்ரீன் டெனிசியஸ்**

ஜெஸ்ரீன் டெனிசியஸ் திறம் என்கிறார்.

**டெய்சி தேவராஜா**
**யாழ்ப்பாணம்**

டெய்சி தேவராஜா என்பவர் நன்றி எனப் படம் போட்டுக் காட்டியுள்ளார்.

**துரைசிங்கம் கமிலஸ்**
**ரொறென்ரோ, கனடா**

கனடா ரொறென்ரோவில் வசிக்கும் துரைசிங்கம் கமிலஸ் என்பவர் ஊர்காவற்துறையைச் சேர்ந்தவர். ரொறென்ரோவில் சமய,சமூக,அரசியற் பணிகளில் முன்னின்று பணியாற்றுபவர். அவர் முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் கனவும் இதுதான் என்கிறார். இதை பிரிவாகப் பார்க்காமல் வளர்ச்சிப் படியாகப் பார்க்க வேண்டும். புலம்பெயர் தமிழர்களின் முழு ஒத்துழைப்பும் இதற்கு உண்டு. வாழ்த்துக்கள் எனத் தெரிவிக்கிறார்.

**லூசியா ஜெயம்**

லூசியா ஜெயம் என்பவர் சிறந்த ஆலோசனை என்கிறார். ஒருமித்த உள்ளத்துடன் ஒன்றாக செபித்து சிறந்த முடிவுகளை செயல்படுத்த தூய ஆவியார் துணை நிற்பாராக என வாழ்த்துகிறார்.

**பற்றிக் டொனால்ட்**
**பதுளை**

பற்றிக் டொனால்ட் என்பவர் மிக அருமை எனக் கருத்துத் தெரிவிக்கிறார்.

**செபஸ்ரியன் பிலிப்**

செபஸ்ரியன் பிலிப் என்பவர் சும்மா திறம் என்கிறார்.

**கயித்தான் பேணாட்**
**இளவாலை**

கயித்தான் பேணாட் என்பவர் இளவாலையில் வசிப்பவர். வவுனியா கல்வியல் கல்லூரி ஓய்வு நிலை விரிவுரையாளர். அவரின் கருத்து இதுவாகும். காலத்தின் தேவையறிந்த முயற்சி. பெறுமதியான நோக்கங்களுடன் நல்ல ஆரம்பமாகும். நாதியற்று இருக்கும் தமிழர்களுக்கு விடிவெள்ளியாகவும் இடைவெளிகளுடன் உலவும் தமிழ்த் தேசியம் பேசும் தலைவர்கள் என்போரையும் ஒழுங்குபடுத்தும் வழிப்படுத்தும் அமைப்பாகவும் இயங்க வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

**ஜோண் குணசேகரம்**
**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஜோண் குணசேகரம் என்பவர் ஒன்றல்ல, மூன்று அனிமேசன் படங்களை ஒன்றன்பின் ஒன்றாக பதிவு செய்து திறம் - அருமை - நல்ல வேலை எனக்கருத்து தெரிவிக்கிறார்.

**ஆன்சலா றஜனி**
**வவுனியா**

ஆன்சலா றஜனி என்பவர் வாழ்த்துக்கள். இறைவனின் அருளும் ஆசியும் நிறையக் கிடைக்கட்டும் எனத் தெரிவிக்கிறார்.

**யூட் சுதர்சன் அடிகளார்**
**யாழ்ப்பாணம்**

கிறிஸ்தவ மத குருவான யூட் சுதர்சன் அடிகளார் நீண்ட கால தூரநோக்குடைய பார்வையையும் பணியையும் அதனோடு தொடர்புடைய நோக்கங்களையும் பாராட்டுகிறேன் என்கிறார்.




**அருள்நேசன் நேசன்**
**யாழ்ப்பாணம்**

அருள்நேசன் நேசன் என்பவர் குரு முதல்வரின் கருத்துக்கள் அருமையானவை எனத் தெரிவிக்கிறார்.

**தேவநாயகம் ஜெனட்**

தேவநாயகம ஜெனட் என்பவர் 'சுப்பர்' எனத் தெரிவிக்கிறார்.

**பேதுறுப்பிள்ளை ஜெயந்தன்**
**பரிஸ், பிரான்ஸ்**

பேதுறுப்பிள்ளை ஜெயந்தன் என்பவர் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்றவர். தற்போது பரிஸ் பிரான்ஸில் வசிப்பவர். வாழ்த்துக்கள் என்று தெரிவிக்கிறார்.

(முகநூல் பதிவுகள் தொடரும்)



# இறைவனால் நிச்சயிக்கப்பட்டு சட்டங்களால் வழிநடத்தப்படும் திருமணம்

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)

அனைவருமே வாழ்க்கையில் அறிந்திருக்க வேண்டியதும், வாழ்க்கையில் மிகப்பெரிய தருணமாக அனைவராலும் எதிர்பார்க்கப்படும் மிக முக்கியமான விடயங்களில் ஒன்றும், வாழ்க்கையின் மிகப் பெரும் பங்கு வகிக்கும் மேலும் சிலருக்கு வாழ்க்கையையே புரட்டிப்போடும் ஒரு நிகழ்வான திருமணம் பற்றிய புரிதல் அத்தியாவசியமானதாகும்.

சமூகமொன்றில் சட்ட ரீதியான உரிமைகளை அனுபவிப்பதற்கு ஆட்களை உருவாக்குவதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறிமுறையாக திருமணம் இருக்கின்றது. திருமணத்தில் பாலியல் திருப்தி அடைதலைத் தாண்டி அதன் விளைவாக பிறக்கும் குழந்தைகளுக்கு சட்ட அந்தஸ்தை வழங்குதலில் இது முக்கியமானது.

திருமணம் தொடர்பான சட்டத்தின் அமைப்பு பொதுச் சட்டம், வழக்காற்றுச் சட்டம் மற்றும் தனிப்பட்ட சட்டம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இலங்கையில் பல்லின, பல மதங்களைக் கொண்டவர்கள் வாழ்கின்றனர். அவர்களின் கலாசாரத்துக்கு அமைவாக திருமணச் சட்டங்கள் இருக்கின்றன. அதாவது கண்டிய சிங்கள மக்களுக்கும் கரையோர சிங்கள மக்களுக்கும் வேறுபட்ட சட்டமும், முஸ்லிம்களுக்கு அவர்களின் மதம் சார்ந்த முஸ்லிம் சட்டமும், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு தேசவழமைச் சட்டமும் இருப்பதுடன் எல்லோருக்கும் பொதுவான சட்டமாக பொதுத் திருமணச் சட்டமும் (General Marriage Ordinance) உண்டு.

இந்தப் பதிவில் பொதுச் திருமணச் சட்டத்தில் தேவைப்படுத்தப்படும் தகைமைகள்/தகுதிகள் என்னவென்று பார்ப்போம்.

### திருமணத்தின் அடிப்படைகள்

**01) திருமண வயது**

1995ஆம் ஆண்டு கட்டளைத் திருத்தத்தின்படி, ஆண்களுக்கும் பெண்களுக்



## சட்டம் ஒரு வெளிச்ச அறை

கும் திருமணத்தின் குறைந்தபட்ச வயது 18 ஆக உயர்த்தப்பட்டது. எவ்வாறாயினும், தனிச்சட்டமான முஸ்லிம் சட்டத்தில் மைனர் சம்பந்தப்பட்ட திருமணத்துக்கு சம்மதிக்கப் பெற்றோருக்கும், காதியாருக்கும் அங்கீகாரம் அளிக்கின்றது.

**02) தடுக்கப்பட்ட திருமணங்கள்**

**நீங்கள் யாரைத் திருமணம் செய்ய முடியாது?**

பொதுவாக இரத்த உறவு தொடர்புபட்ட நபர்களுக்கிடையிலான திருமணங்கள் தடுக்கப்பட்டுள்ளன. பொதுத் திருமணச் சட்டத்தின் கீழ் யாரெல்லாம் திருமணம் செய்ய முடியாது எனப் பட்டியலிடுகின்றோம்.

* ஒருவர் மற்றவரின் வாரிசாக இருத்தல் - உதாரணமாக ஒருவர் பெண்ணொருத்தியுடன் சேர்ந்து வாழ்ந்து, அந்தத் திருமணம் பதியாமல் இருந்து பின்னர் அந்தப் பெண்ணின் மூலம் தனக்குப் பிறந்த பிள்ளையைத் தானே திருமணப் பதிவு செய்தால் அது செல்லுபடியற்றது.

* ஒரு நபருக்கும் அவரின் மனைவி/கணவனின் முன்னைய தாரத்தின் மகள்/மகனுடனான திருமணம்

உதாரணமாக ஒருவர் பெண்ணொருத்தியுடன் சேர்ந்து வாழ்ந்து, அந்தத் திருமணம் பதியாமல் இருந்து பின்னர் அந்தப்பெண்ணின் முதல் கணவருக்குப் பிறந்த பிள்ளையைத் திருமணப் பதிவு செய்தால் அது செல்லுபடியற்றது.

* இரத்த வழி உறவுள்ள சகோதர - சகோதரிகள் தமக்குள் திருணம் செய்ய முடியாது.

அதாவது ஒரு நபருக்கும் அவரின் மகன்/மகள், பேரன்/பேத்தி, தாய்/தந்தை, தாத்தா/பாட்டி ஆகியோரின் விதவை/தாரமிழந்தவருக்கும் (தபுதாரன்) இடையிலான திருமணம் தடுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக ஒருவர் பெண்ணொருத்தியுடன் சேர்ந்து வாழ்ந்து, அந்தத் திருமணம் பதியாமல் இருந்து பின்னர் தனது மகன் இறந்தபின், மகனின் மனைவியை (மருமகள்) திருமணப் பதிவு செய்தால் அது செல்லுபடியற்றது.

அத்தகைய கட்சிகளுக்கு இடையேயான திருமணம் அல்லது ஒத்துழைத்து வாழுதல் சிறைத்தண்டனைக்கான குற்றமாகும்.

(மச்சான் - மச்சாள் போன்றோருக்கிடையிலான திருமணங்கள் தடுக்கப்படவில்லை. எனினும், மருத்துவ காரணங்களின் கீழ் இவை பெரிதும் விரும்பப்படுவதில்லை.)

* ஒரே இனத்தைச் சேர்ந்த ஆண் - ஆண் அல்லது பெண் - பெண் திருமணம் செய்வதும் குற்றமாகின்றது.

**03) முதல் திருமணம் செய்திருத்தல்**

முதல் திருமணமானது நிலைத்திருக்கும் வேளையில் மாற்றி திருமணம் செய்து கொள்வது தடுக்கப்படுகின்றது. ஆனால், இதில் முஸ்லிம் சட்டமானது வித்தியாசமான நடைமுறையைப் பின்பற்றி வருகின்றது.

**04) திருமண சம்மதம்**

ஐக்கிய நாடுகள் சபையின் திருமணப் பதிவு தொடர்பாக 1962இல் வெளியிட்ட அறிக்கையில் இரண்டு தரப்பினரின் முழுமையான சுதந்திரமான சம்மதமின்றி எந்தத் திருமணமும் சட்ட ரீதியாக ஏற்படுத்த முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கையின் பொதுத் திருமணச் சட்டத்தின்படி திருமணப் பதிவில் இரு தரப்பினர் கையொப்பமிடுவதன் மூலம் சம்மதத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**05) திருமணப் பதிவு**

கட்டளைகளின் கீழ் திருமணங்களைப் பதிவு செய்வது கட்டாயமில்லை. திருமணம் பதிவு செய்யப்பட்டமையே திருமணம் ஒன்றுக்கான சிறந்த சான்றாகும். ஆகவே, இந்து, பௌத்த மற்றும் கிறிஸ்தவ சடங்குகள் மற்றும் சடங்குகளின்படி புனிதமான திருமணங்கள் உட்பட வழக்கமான திருமணங்கள் பதிவு செய்யப்படாதவை என்றாலும் அவை செல்லுபடியாகும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆகவே, ஆணும் பெண்ணும் கணவன் - மனைவியாக இணைந்திருக்கின்றார்கள் என்பதற்கான ஆதாரத்தின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுவிட்டால், அவர்கள் சரியான திருமணத்தில் ஒன்றாக வாழ்கின்றார்கள் என்று சட்டம் கருதுகின்றது.

ஒத்துழைப்பு என்பது திருமணச் சடங்குகள் நடைபெறாது ஆணும் பெண்ணும் ஒத்துழைத்து தமது குடும்ப வாழ்க்கையைக் கொண்டு செல்வதைக் குறிக்கின்றது. இது திருமணத் தன்மையை உறுதியாக நிரூபிக்கவில்லை.

எது எதுவாக இருந்த போதிலும் திருமணப் பதிவு என்பது பிற்பட்ட வாழ்க்கையில் எமக்கும், எமக்கு பின்வந்த வாரிசுகளுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தாது சுபீட்சமான வாழ்க்கை நடத்த உதவும் என்பதால் பதிவுத் திருமணம் என்பது என்றும் சிறந்ததுதான்.

திருமணம் என்பது வாழ்க்கையில் பெரும் பங்கை வகிக்கின்றது. அதனால் தான் இத்தனை சட்ட ஏற்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆகவே, ஒரு தனி மனித வாழ்வுக்காக இத்தனை சட்ட ஏற்பாடுகளும் செய்யப்பட்டு நடத்தப்படும் திருமணம் நிலைத்திருக்கவும் வேண்டும் திருமணத்தால் ஏற்படும் விளைவுகள் சிறப்பானதாக அமையவும் வேண்டும்.

அதற்குச் சட்டம் மட்டும் முயற்சி செய்தால் போதாது. ஒவ்வொரு தனிமனிதனும் தனது வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த முயற்சி செய்வதன் மூலம் வாழ்க்கையை நிம்மதியாகக் கொண்டு நடத்தலாம்.

> திருமணம் என்பது வாழ்க்கையில் பெரும் பங்கை வகிக்கின்றது. அதனால்தான் இத்தனை சட்ட ஏற்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒரு தனி மனித வாழ்வுக்காக இத்தனை சட்ட ஏற்பாடுகளும் செய்யப்பட்டு நடத்தப்படும் திருமணம் நிலைத்திருக்க வேண்டும்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 151 பேர் கைது!

**பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவிப்பு**

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 151 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சளார் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை மீறி மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க முயன்ற 234 பேரும் 165 வாகனங்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

குறுக்குப் பாதைகள் ஊடாக மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க மற்றும் மேல் மாகாணத்திலிருந்து வெளியேற முயன்ற 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்கும் 3 இடங்களில் 1,670 வாகனங்களும், 2 ஆயிரத்து 493 பேரும் நேற்றுமுன்தினம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பொது அறிவு வாராந்தம் ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக் கிழமை பிரசுமாகும்.

சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.

தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியானபதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

1. உலகின் மிக நீளமான மலை எது?
2. மனிதன் சிரிப்பதனைப்போன்று குரல் எழுப்பும் பறவை எது?
3. நமது கால்ப் பாதங்களில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன?
4. இரத்தத்தின் PH எவ்வளவு?
5. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் யார்?
6. உலகில் எந்த நாட்டில் அதிகளவு பெற்றோல் இருப்புகள் உள்ளன?
7. பிரிட்டனின் தேசிய மலர் எது?
8. 15 நிமிடங்கள் மட்டுமே அரசராக இருந்தவர் யார்?
9. முதலைக்கு எத்தனை பற்கள் உண்டு?
10. திருமுருகாற்றுப்படை எனும் நூலின் ஆசிரியர் யார்?

பெயர் :- ...............................................
முகவரி :- ...............................................
தொலைபேசி இலக்கம்:- ......................
அடையாள அட்டை:- ..........................
மின்னஞ்சல் முகவரி:- ........................

## 25.07.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

| | |
|---|---|
| 01.ஆரியபட்டா | 06.நண்டு |
| 02.ஜப்பான் | 07.பச்சோந்தி |
| 03.25, 36 | 08.6.5 - 7.5 |
| 04.ரப்லேசியா அர்னால்டி | 09.நியூசிலாந்து |
| 05.நாக்கு | 10.ரேடியம். |

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| ஏ.துஷான் | - நீர்வேலி. | 10 |
| எஸ்.சதுர்ஜினி | - அல்வாய். | 10 |
| பி.ஸ்ருதி | - மட்டக்களப்பு. | 10 |
| கே.ஸ்ரீதரன் | - கொழும்பு. | 09 |
| கே.சரிதா | - நெடுந்தீவு. | 10 |
| ஜே.வினோஜன் | - குடத்தனை. | 09 |
| வர்ஷா | - தெகிவளை. | 10 |
| ஐ. கார்த்திகன் | - யாழ்ப்பாணம். | 09 |
| கே.அனுசன் | - ஏழாலை. | 10 |
| யு.யாமலை | - கொழும்பு. | 09 |
| கே.டெனுஷா | - அவிசாவளை - | 07 |

# கடுமையான முடிவுகள் எடுக்க வேண்டி வரும்!

## பிரதமர் எச்சரிக்கை

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுக்கு தற்போதுள்ள கட்டுப்பாடுகளுக்கு அப்பால் கடுமையான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றுநோய் இருந்த போதிலும், சிலர் தங்களது சுகாதார ஆலோசனைகளைத் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர் எனவும், பொது மக்களின் இந்தச் செயற்பாடு பயனற்றது என்றும் பிரதமர் கூறினார்.


இதன்படி, இன்றும் நாளையும் கடுமையான முடிவுகள் எடுக்கப்படும் என்றும், நாட்டு மக்களின் உயிர்களைக் காப்பாற்ற அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றும் மக்களின் ஆதரவின்றி கொவிட் தொற்றை கட்டுப்படுத்த முடியாது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதாகவும், முதல் மற்றும் இரண்டாவது அளவு மக்களுக்கு வழங்கப்பட்ட பிறகு, தேவைப்பட்டால், உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தல்களின்படி மூன்றாவது தடுப்பூசியைப் பெறலாம் என்றும் அவர் கூறினார். எனினும், முதல் மற்றும் இரண்டாவது தடுப்பூசிகள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தடுப்பூசியை மறுத்தவர்கள் கூட தடுப்பூசி பெற கடுமையாக முயற்சிக்கின்றனர் எனவும் பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

# பிரித்தானியாவிலிருந்து வந்தவர் கஞ்சாப் பொதியுடன் கைதானார்

பிரித்தானியாவில் இருந்து இலங்கை வந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹிக்கடுவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது பிரித்தா னிய பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப் பட்ட சந்தர்ப்பத்தில் அவரிடம் ஒரு கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார். 43 வயதுயடைய குறித்த நபர் இலங்கையில் சில நாள்களாக தங்கியிருக்கிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் றோஹண குறிப்பிட்டுள்ளார்.

# மாங்கல்யா

## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1987.05.08 மதம் – இந்து
ஜாதி – P பருதி ஆண் நட்சத்திரம் – பூரம் 1
கி.பா – 34 செவ் – 01 இல்
தகைமை – G.C.E.A/L தொழில் – Brithsh council
எதிர்பார்ப்பு – அரச சேவை + வெளிநாடு மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1985.04.16 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 9 செவ் – 12இல்
தகைமை – B.SC M.SC
தொழில் – software Eng. USA pr
எதிர்பார்ப்பு – U.S.A. + ceylon பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி – 1987.06.14 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தராடம் 1
கி.பா – 23 செவ் – 11இல்
தகைமை – B.FA
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1987.06.11 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கேட்டை
கி.பா – 30 செவ் – 9இல்
தகைமை – B.SC தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை

பிறந்த திகதி – 1989.11.10 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தராட்டாதி
கி.பா – 18 செவ் – சூரி 9இல்
தகைமை – B.SC தொழில் – ENG. (company)
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள் தேவை

பிறந்த திகதி – 1978.08.01 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருவாதிரை4
கி.பா – 29 செவ் – 03இல்
தகைமை – BIT
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – படித்த மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1980.10.26 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கார்த்திகை 4
கி.பா – 30 செவ் – 1இல்
தகைமை – G.C.E. A/L தொழில் – சொந்தக்கடை
எதிர்பார்ப்பு – A/L படித்த கிளிநொச்சி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1990.06.22 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருவாதிரை 1
கி.பா – 65 செவ் – 1இல்
தகைமை –M.B.B.S. தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor Eng. Bank மணமகள் தேவை

### மணமகள் விவரம்

பிறந்த திகதி – 1991.11.23 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – ரோகினி 4
கி.பா – 21 செவ்/ சூரி – 10இல்
தகைமை – IT தொழில் – Company (jaffna)
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை

பிறந்த திகதி – 1994.01.01 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 56 செவ்/ சூரி – 7இல்
தகைமை – HN.DA. தொழில் – Management assistant
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை

பிறந்த திகதி – 1991.09.28 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – கார்த்திகை 2
கி.பா – 18 செவ் / சூரி – 10இல்
தகைமை – B.COM AAT தொழில் – Company
எதிர்பார்ப்பு –அரச சேவை Australia Canada பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி – 1996.01.23 மதம் – இந்து
ஜாதி – விஸ்வகுலம் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 17 செவ் / சூரி – 11இல்
தகைமை – Computer ENG தொழில் – Company
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகன் தேவை

பிறந்த திகதி – 1989.09.24 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – புனர்பூசம் 2
கி.பா – 18 செவ்/ சூரி – 12இல்
தகைமை – Chatered Accountant
தொழில் – Accoutant
எதிர்பார்ப்பு – பட்டதாரி அவுஸ்ரேலியா PR மணமகன் தேவை.

பிறந்த திகதி – 14.02.1992 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மிருகசீரிடம் 2
கி.பா – 26 செவ் – 2இல்
தகைமை – Software eng.
தொழில் – அரச சேவை கொழும்பு
எதிர்பார்ப்பு – கொழும்பில் அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 16.04.1991 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பரனி 2
கி.பா – 22 செ – 2இல்
தகைமை – M.B.B.S. தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor Eng. மணமகன்

பிறந்த திகதி – 1990.12.08 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 24 செவ் – 8இல்
தகைமை – M.B.B.S. தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor Eng. மணமகன் தேவை.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

# கொரோனா வைரஸ் தொற்று; மன்னாரில் மேலுமொரு சாவு

மன்னாரில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதற்கமைய மன்னாரில் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் த.விநோதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த 9 ஆம் திகதி, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கீரி பகுதியைச் சேர்ந்த( வயது 77) வயோதிபர் ஒருவர், நிமோனியா காய்ச்சல் காரணமாக சிகிச்சை பலனின்றி, நேற்று உயிரிழந்தார்.

மேலும் கடந்தமுதலாம் திகதி தொடக்கம் நேற்று வரையிலான காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் 220 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை மாவட்டத்தில் இதுவரை 1,261 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பயணக்கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டாம்!

## நிபுணர்கள் குழு கோரிக்கை

பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டாம் என்று நிபுணர்கள் குழு கோரியுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. சுகாதார சேவைகளின் துணை பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். பொருளாதார இழப்பை கருத்தில் கொண்டு நிபுணர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு நீண்ட கால முடக்கம் அமுல்படுத்தப்பட்டது, இதன் காரணமாக நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டது, எனினும் அது பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும், வைத்தியர்கள் நோயாளிகளின் நலனில் மிகுந்த கவனம் செலுத்துவதாக அவர் கூறியுள்ளார். தற்போதைய நிலைமை தொடர்பாக இரண்டு துறைகளில் நிபுணர்கள் பரிந்துரைகளை வழங்கியுள்ளனர்.

ஒரு குழு நாடு முடக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளது, மற்றொரு குழு முடக்கம் தீர்வு அல்ல எனவும் ஏனெனில் நாடு மீண்டும் திறக்கும் நேரத்தில் பொருளாதாரம் பாதிக்கப்படும் எனவும் கூறியுள்ளது.

ஊரடங்கு நாளாந்தம் ஊதியம் பெறுவோர் மத்தியில் சிக்கலை ஏற்படுத்தும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர் என வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறியுள்ளார்.

# இலங்கை அரசு மீது ஐ.நா. விமர்சனம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இலங்கை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள புதிய விதிமுறைகளை கடுமையாக விமர்சித்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அதனை மீளப் பெறுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் கோரியுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதம் 12 ஆம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்ட, கடும் அடிப்படைவாத கொள்கைகளிலிருந்து மீட்கும் உத்தரவு தொடர்பிலான வர்த்தமானி விதிமுறைகளானவை 'முழுமையான துல்லியம் மற்றும் சட்ட உறுதி இல்லாத, கருத்து சுதந்திரம், சித்தாந்தம் மற்றும் மத நம்பிக்கைகளுக்கு இடையிலான ஒரு மோதல்' என ஏழு சர்வதேச மனித உரிமை நிபுணர்களால் ஓகஸ்ட் 9 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நாவின் விமர்சனங்களுக்குப் பதிலளிக்குமாறு ஜனாதிபதியையும் அழைக்கும் கடிதம், அடுத்த ஜெனிவா மனித உரிமை அமர்விற்கு ஒரு மாதத்துக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய விதிமுறைகளை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை, மனித உரிமைகள் தொடர்பாக அரசாங்கம் பின்பற்ற வேண்டிய உலகளாவிய மரபுகளின் தொடர் மீறல் என்பதை 13 பக்கக் கடிதம் நினைவூட்டியுள்ளது.

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம், சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனம், சர்வதேச பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் சாசனம், அனைத்து நபர்களையும் கட்டாய காணாமல் போவதிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாடு அதேபோல் 1992 தேசிய, இன, மத மற்றும் மொழி சிறுபான்மையினர் பற்றிய பிரகடனம் மற்றும் மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான பாகுபாடுகளின் அனைத்து வடிவங்களையும் நீக்குவதற்கான 1981 பிரகடனம் ஆகியன இந்தக் கடிதத்தில் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சேர்க்கப்படும் புதிய விதிமுறைகள், சட்டத்தின் விதிகளுக்கு இணங்காமல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர், வழக்கு விசாரணையின்றிய 'புனர்வாழ்வு' என்ற விடயம் மனித சுதந்திரத்தை பறிக்க உத்தியோகபூர்வமாக அனுமதிக்கும் என நிபுணர் குழு கவலை தெரிவித்துள்ளது.

புதிய விதிகளுக்கு அமைய கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் காணாமல் போகும் மற்றும் சித்திரவதைக்கு ஆளாக நேரிடும் என ஐக்கிய நாடுகள் சபை அச்சம் வெளியிட்டுள்ளது.

'விதிமுறையின் பிரிவு 3, சட்டத்தை அமுல்படுத்தாத நிறுவனங்கள், தனிநபர்களை 24 மணிநேரம் வரை தடுத்து வைக்க அனுமதிப்பதாகவும், கட்டாயமாகக் காணாமல் போதல் மற்றும் சித்திரவதை, மனிதாபிமான மற்ற மற்றும் கீழ்த்தரமான நடத்தையின் அபாயத்தை ஏற்படுத்துகிறது' – என ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்தனர்.




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. நல்லூர் இராச்சியத்தின் கடைசி மன்னன் யார்?**

..........................................................................................

**2. நல்லூர் ஆலய அறங்காவலர்களின் குடும்பப் பெயர் என்ன?**

..........................................................................................

**3. நல்லூர் ஆலயத்தில் திருவூஞ்சல் பாடப்படும் இரண்டு சந்தர்ப்பங்கள் எவை?**

..........................................................................................

**4. இராசதானி காலத்தில் நல்லூர் ஆலயத்தின் வரலாறு வளர்ச்சி குறித்துப் பேசும் இரண்டு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக?**

..........................................................................................

**5. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வேல் பிரதிஸ்டை தினம் (திதி) எது?**

..........................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் – பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

03

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------------
4. பாடசாலை : ------------------------------------------------------
5. முகவரி : ---------------------------------------------------------

...........................................
கையொப்பம்

## கொரோனாவில் இருந்து மேலும் 2,717 பேர் குணம்

இலங்கையில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 2,717 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 7 ஆயிரத்து 345 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 48 ஆயிரத்து 270 ஆகப் பதிவாகியுள்ளது.

அதில் 35 ஆயிரத்து 150 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்ற அதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 775 ஆக உயர்ந்துள்ளது.

## ரயில்வே பொறுப்பதிகாரிகளின் ஆர்ப்பாட்டங்கள் இடைநிறுத்தம்

தங்களது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட போக்குவரத்து அமைச்சர் ஒப்புக் கொண்டமையால் ரயில்வே நிலையப் பொறுப்பதிகாரிகளின் ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் அவர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நாளை இடம்பெறவுள்ள கலந்துரையாடலைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சேமரத்ன தெரிவித்துள்ளார்.

## இணையத்தள மனுவில் ஒப்பமிட ஆசிரியர்கள் தீர்மானம் எடுப்பு

அதிபர் – ஆசிரியர்கள் சம்பளப் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்க வேண்டும் எனக் கோரி இணையத்தளத்தின் ஊடாக மனுவில் கையொப்பமிட தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று (சனிக்கிழமை) முதல் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2021 இல் வெளியிடப்பெற்றது.





# பேரிடரால் அமைதியாக நடக்கும் மருதமடு அன்னையின் பெருவிழா

-ஆசைமுத்து அல்பிரட் ஞானராஜா-
(மொன்றியல் - கனடா)

நாமமனைவரும் அம்மா எனப்பெருமையோடு அழைக்கும் தேவ அன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவை இன்று ஒகஸ்ட் 15இல் உலகெங்கும் வாழும் அனைத்துக் கத்தோலிக்கரும் கொண்டாடி னாலும் கொடிய கொரோனா ஆதிக்கத்தின் நடுவில் 2021ஆம்வருடத்தில்மருதமடுத்திருப்பதியில்மாபெரும் விழாவாக இதனைக் கொண்டாட முடியாதுள்ளது.

மடுத்திருப்பதிக்கு வருவோரிடம் ஆழமான ஆன்மீ கப் புதுப்பித்தல் நடைபெறுவதற்கான அகச்சூழலும் புறச்சூழலும் நிறைவாக அமைந்துள்ளதனை கடந்த 1984இல் எனது பிறப்பிடமான முல்லைத்தீவில் இருந்து கால்நடை யாத்திரிகனாக இரண்டு பகலும் இரண்டு இரவும் நடந்து சென்றதன் பட்டறிவால் நான் நன்கு அனுபவித்தவன்.

மடுத்திருப்பதி அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஒரு காந்த சக்தி. வன்னிப் பெருநிலத்தில் மாந்தைப் பகுதியில் வனவிலங்குகள் வாழும் அடர்ந்த காட்டின் மையத்தில் எழில்மிகு அன்னையாக, கானகச் செல்வி யாக மடு அன்னை எழுந்தருளி தன்னை நோக்கி வரும் அனைவருக்கும் அடைக்கலம் கொடுத்து அருள் மழை பொழிகின்றாள் என்பதனை எனது சிறிய அறி விற்கு எட்டிய அளவில் இப்பதியின் வழியாகப் பணி வோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இனமத பேதமின்றி மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு தாய் மக்களாக ஒரே குடையின் கீழ் நிற்பது மடுத் திருப்பதியில்தான். ஆகவேதான் அன்று தொட்டு இன்று வரை மடுத்திருப்பதி ஒற்றுமையை - ஒன்றிப்பை - சமா தானத்தை - ஏற்படுத்துவதில் பாரிய பங்களிப்பை ஆற்றிவருகின்றது. ஒருவர் மற்றவரை எதிரியாக நினைத்துக்கொண்டு இருக்கும் சூழ்நிலையில் ஒருவர் மற்றவரைப் பார்க்க, சிரிக்க, பேச, புரிந்துகொள்ள தக்க தோர் தளமாக மடுத்திருப்பதி விளங்குகின்றது.

மடுத்திருப்பதியின் அற்புத ஆற்றலையும் அன்னை யின் திருத்தலம் வழங்கும் ஆன்மீகப் புதுப்பித்தல் அனுபவத்தையும் இலங்கை நாட்டின் நிகழ்கால அர சியல் சூழமைவில் எவ்வாறு தேசிய இன ஒற்று மைக்கு களமாக அமைகின்றது என்பதையும் எம்மால் புரிந்துகொள்வதற்கு அன்னையின் திருப்பதிக்கு வரு டாந்தம் லட்சக்கணக்கில் ஆவலோடு செல்லும் ஒவ் வொரு யாத்திரிகர்களும் உயிருள்ள உண்மைச் சாட்சி யம் என்பதே மறுக்க முடியாத உண்மை.

கருணை மழை பொழியும் கானகச் செல்வி மருத மடு அன்னை குறைவுபடாத தாயன்புக்கு இலக்கணம் வகுப்பவள். தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை எனப்படும் உணர்வுடன் லட் சக்கணக்கானோர் இன,மத,மொழி வேறுபாடின்றி ஆண்டுதோறும் இத்திருப்பதி நோக்கி ஓடோடி வருகின் றார்கள் என்பது சிறு வயது முதல் பலதடவைகள் யாத் திரிகனாகச் சென்று நான் கண்டறிந்த மிகப்பெரிய உண்மையாகும்.

தாயன்பு எனப்படுவது அது ஒரு தனித்துவமான அன்பென மூத்தோர் தமது பட்டறிவால் தெரிவிப்பார் கள். அம்மை - அப்பனாக விளங்கும் எல்லாம் வல்ல மூவொரு இறைவனுடைய தாயன்பை பரிசுத்த வேதா கமத்தில் அழியா வார்த்தைகள் தெளிவாகச் சொல்கின்றன. நீங்கள் மார்பில் அணைக்கப்படுவீர்கள். மடியில் வைத் துச் சீராட்டப்படுவீர்கள். ஒரு தாய் தன் குழந்தையைத் தேற்றுவதுபோல நானும் உங்களைத் தேற்றுவேன் (எசாயா 66 : 13) எனப்படும் இறைத் தந்தையின் இத் தகைய அன்பையே மடு அன்னையும் எமக்குத் தரு கின்றாள்.

பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன் (மத்தேயு 11:28) என்ற ஆண்டவர் இயேசுவின் தாயான எமது அன்பின் மடு அன்னையும் தனது தனயனின் அதே வார்த்தைகளைக் கூறி எமை அழைக்கும் அந்த அன்புத் தாயின் அருகில் இருக்க, அவளது பாதத்தில் அமர்ந்து தமது குறைகளைச் சொல்ல, அவளது தாயன்பில் தம்மை மறந்திருக்க, அவளது அன்புப் பிள்ளைகள் இலங்கையின் நாலா திசைகளில் இருந்தும் வந்து குவிந்து ஆறுதலையும், தேறுதலையும் பெறுகின்றார்கள்.

மடுத்திருப்பதிக்கு வெறும் பொழுது போக்கிற்கா கவோ அல்லது கேளிக்கைக்காகவோ எவரும் செல்வ தில்லை. மாறாகத் தமது ஆன்மீக வாழ்வில் ஒரு மாற் றத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்திப் புதிய வாழ்வை அடையவேண்டும் என்ற ஆன்மீகத் தாகத்தோடும் ஒரு புது வேகத்தோடும் பல்வேறு மக்கள் இத்திருப்பதி யை நோக்கி வருகிறார்கள்.

மடுத்திருத்தலம் செல்லும் யாத்திரிகர்கள் வழி நெடுகிலும் செபமாலை செபிப்பதோடு அல்லது தேவ அன்னையாம் மடு அன்னையைப் பாடல்களால் பாடிப் புகழ்ந்தவாறு மிகுந்த பக்தி சிரத்தையோடு மடு அன் னையின் புண்ணிய பூமியிலே தம் பாதங்களைப் பதிப்பார்கள்.

மடுத்திருப்பதியின் நுழைவாயிலில் அமைந்துள்ள மடு அன்னையின் வரவேற்பு மாதா திருச்சுரூபம் இரு கரங்களையும் விரித்தவளாய் தன் திருப்பதி நோக்கி வரும் அனைவரையும் அழைக்கும் தோற்றத்தோடு விளங்குவது கண்ணுக்கினிய அருமையான காட் சியாகும்.

மடுத்திருப்பதியிலே யாத்திரிகள் அதிகமான நேரங் களை அன்னையின் பாதத்தில் அமர்ந்து செபமாலை செபிப்பதில் செலவிடுவர். எல்லாவற்றையும் விட மேலாக ஒப்புரவு அருட்சாதனத்தை தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் வழங்க அருட்தந்தை யர்கள் தயார் நிலையில் இருப்பதனால் பல யாத்திரி கர்கள் அன்னையின் திருத்தலத்தில் ஓர் ஆன்மீகப் புதுப்பித்தல் அனுபவத்தைப் பெறுகின்றார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மடுப்பதியில் திருப்பயணிகள் ஆன்மீகப் பாதையில் வழிநடத்தப்படவென ஒவ்வொருநாளும் ஒலிபெருக் கியில் பரிசுத்த திருப்பலிகள் மட்டுமல்ல செபமாலை மற்றும் அன்னையைப் புகழும் பாடல்கள் தமிழ் மற் றும் சிங்கள மொழிகளில் ஒலித்து ஒரு மறைமுக ஆன் மீக வழிநடத்துதலை நோக்கி எம்மை அழைத்துச் செல்வதனை நான் பல தடவைகள் அனுபவித்தவன்.

ஒவ்வொரு நவநாளுக்குமுரிய விசேட தலைப்புக்கள் அருட்தந்தையர்களால் மிகவும் கவனமாகத் தேர்வு செய்யப்பட்டு காலைத் திருப்பலியும் மாலைத் திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனையும் மறையுரையும் இருமொழிகளிலும் இடம்பெறும். மடுப்பதியிலிருந்து தமது வீடுகளை நோக்கித் திரும்பிச் செல்லும்போது பிரியமுடியாத கவலையோடும் கண்ணீரோடும் லட் சக்கணக்கானோர் பிரிந்து செல்வதனைக் காணும் போது அவர்கள் ஒருவித ஆன்மீகப் புதுப்பித்தல் அனுப வத்தோடு பிரிந்து செல்வது உணரப்படுகிறது.

இலங்கை மண்ணில் பிறந்த அனைத்து இன மக் களையும் வரவேற்று, ஒன்று சேர்த்து, நட்புறவு - ஒற் றுமை - ஒன்றிப்பின் மையமாக மடுத்திருப்பதி திகழ்ந் தாலும், யுத்தம் முடிவடைந்து, யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்தாலும் கடந்த பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை எதற்காகத் தொடர் கதையாகவுள் ளது?.

2019 வருட உயிர்ப்பு ஞாயிறு நாளில் ஏற்பட்ட பயங்கரவாதக் குண்டு வெடிப்புக்களால் அரசியல் பழி வாங்கல் எனப்படும் யுத்தத்தின் வடுக்களோ அல்லது மனக்காயங்களோ மாற்றமடைந்து உள்ளனவா? எனவே அனைத்து இன,மத,மொழி பேசும் இலங்கை மக்கள் மத்தியில் மன்னிப்பு, ஒப்புரவு, சமாதானம் போன்ற உயர்ந்த விழுமியங்களை ஏற்படுத்தும் ஒரே இடம் மருதமடு அன்னையின் புனிதத்திருப்பதி மட் டுமே என்பதனை எனது பணிவான கருத்தாகப் பதி விடுகிறேன்.

# கொவிட் தொற்றின் ஆபத்து; நடிகை விடுக்கும் கோரிக்கை

கொவிட் தொற்று மிகவும் ஆபத்தானது எனவும், ஆகையால் இது தொடர்பாக அனை வரும் விழிப்புடன் இருக்குமாறும் இலங்கை யின் பிரபல நடிகை நயனதாரா விக்கிரமா ராச்சி கோரிக்கை விடுத்துள்ளார்.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலை யில் கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

தனக்கு எந்த நோயும் இல்லை என்பதால் முதல் சில நாள்கள் அதிகம் கவலைப்பட வில்லை, எனினும், பின்னர் கடுமையான சிக்கல்கள் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை செய்துகொண்டேன் எனக் குறிப்பிட்ட அவர், வீட்டில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார் எனவும் கூறியுள்ளார். முதல் மூன்று நாள் கள் இயல்பாக இருந்த தனக்கு அடுத்தடுத்த நாள்களில் நோய்த் தொற்றின் தீவிரத்தை உணரமுடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



சுவாசிக்க சிரமப்பட்டேன் எனவும், பேசுவ தற்கும் மிகவும் சிரமப்பட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதும் பத்து வார்த்தை கள் பேசினால் சுவாசிக்க சிரமம் இருப்பதா கக் கூறியுள்ளார்.

இந்நிலையில், கொவிட் தொற்று ஆபத்தா னது எனவும், ஆகையால் இது தொடர்பாக அனைவரும் விழிப்புடன் இருக்குமாறு இலங் கையில் பிரபல நடிகை நயனதாரா விக்கிர மாராச்சி கோரிக்கை விடுத்துள்ளார்.

# இறக்குமதிக்கான செலவு 30.5 வீதம் அதிகரிப்பு!

## மத்திய வங்கி தகவல்

இந்த ஆண்டின் (2021) முதல் ஆறு மாதங்களில், இறக்குமதிக் கான செலவு 30.5 சதவீதம் அதி கரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட சமீபத்திய அறிக் கையில் இந்தத் தகவல் வெளிப்ப டுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஆண்டு (2020) முதல் ஆறு மாதங்களில் 767.5 கோடி அமெரிக்க டொலராக இருந்த இறக்குமதி செலவு இந்த ஆண்டின் (2021) முதல் ஆறு மாதங்களில் 1,001.5 கோடி அமெரிக்க டொலராக அதிகரித் துள்ளது. இந்தக் காலத்தில் ஏற்று மதி வருவாய் 29.1 சதவீதம் அதி கரித்து 569.9 கோடி அமெரிக்க டொலராக உள்ளது.

எவ்வாறாயினும், ஏற்றுமதி வருவாயை விட இறக்குமதி செலவி னத்தின் வேகமான வளர்ச்சியின் காரணமாக வர்த்தக பற்றாக்குறை (ஏற்றுமதி வருவாய் மற்றும் இறக் குமதி செலவினங்களுக்கிடையே யான இடைவெளி) 326.2 கோடி யில் டொலரில் இருந்து 431.6 கோடி டொலராக அதிகரித்தது.

இந்த காலத்தில் இறக்குமதி செலவு அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் எரிபொருள் இறக்குமதி செலவு 54.38 கோடி அமெரிக்க டொலர்கள் அதிகரித்தமையே என அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.